श्री मातृका पुषपमाला स्तुति

आदिशंकर विरचितम

ஸ்ரீ மூகாம்பிகை சரணம்

ஸ்ரீ மாத்ருகா புஷ்பமாலா ஸ்துதி



ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகள் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் ஸ்ரீ குழந்தையானந்த ஸ்வாமிகள்

ஸ்ரீ மாத்ருகா புஷ்பமாலா ஸ்துதி

["அ" முதல் "க்ஷ" ஈருன மாத்ருகைகள் எனும் அக்ஷரங்களின் வரிசைப்படி ஒவ்வொரு சுலோகத்தின் முதல் எழுத்தும் அமைக்கப்பட்டுள்ளபடியால் 'மாத்ருகா புஷ்பமாலா' எனப்படுகிறது.]

அத்4வாதீதபதே3 அலங்க்ருதசிவே அர்த2ாந்தரர்-
தே2஽பரே
அத்யர்தே2 அமலாசயே அதித3யே அர்தே4ந்து3
பூ4ஷோஜ்ஜ்வலே |
அத்4யக்ஷே அமராங்க3நா பரிவ்ருதே அத்4யாத்ம
வித்3யாமயே
அவ்யக்தே அசலாதி4 ராஜதநயே வந்தே3
(அ)கி2லாண்டே3ச்வரி || 1

அத்துவாக்களைக் கடந்த நிலையில் அலங்கரிக்கப்பட்ட சிவனின் பிராட்டியே, எப்பொருளுக்கும் உள்ளிடான பொருளாக விளங்கு பவளே, தன்னைக் காட்டிலும் மேலான தெய்வம் இல்லை என்னும் படி இருப்பவளே, பொருளனைத்தையும் கடந்தவளே, தூய்மைக்கு உறைவிடமே, மிகுந்த தயை பொருந்தியவளே, பிறையணியால் பிரகாசிக்கின்றவளே, தலைவியே, தேவ மாதர்களால் சூழப்பட்ட வளே, பிரம்ம வித்யா ஸ்வரூபிணியாயிருப்பவளே, சூக்குமமாயி ருப்பவளே, இமவான் கன்னியே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

ஆத்3யே ஆக3ம ஸம்ப்ரத3ாய நிபுணே ஆசார்ய-
வர்யார்சிதே
ஆத4ராதி3 ஸரோஜபீட2 நிலயே ஆலோல-
நீலாலகே |
ஆதாம்ராத4ரசாரு மந்த3ஹஸிதே
ஆபீநவக்ஷோருஹே
ஆப்3ரஹ்மாச்யுத சங்கரார்சிதபதே3
வந்தே3(ஆ)கி2லாண்டே3ச்வரி || 2

ஆதியானவளே, ஆகம மரபை நன்கறிந்தவளே, ஆசார்யப் பெருமக்களால் பூசிக்கப்பட்டவளே, மூலாதாரம் முதலான கமலங்களில் வீற்றிருப்பவளே, அசைகின்ற கருங் கூந்தலை உடையவளே, சிவந்த உதட்டினால் அழகூட்டப்பட்ட புன்முறுவலோடு கூடியவளே, பருத்த தன பாரத்தை உடையவளே, பிரமன், அச்சுதன், சங்கரன் ஆகியோரால் வழிபடப்படுபவளே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

இச்ச[2]ாஞ்ஞான ஸமஸ்த சக்திஸஹிதே இந்தீ[3]வர ச்யாமலே
இந்த்[3]ரோபேந்த்[3]ர வரப்ரதே[3] இப[4]வநாதீ[4]சே இநாராதி[4]தே ।
இஜ்யே இந்து[3] நிப[4]ாநநே இப[4]நுதே இஷ்டார்த[2] ஸித்[3]தி[4]ப்ரதே[3]
இந்த்[3]ராணீ நமிதே இபா[4]நநஸுதே வந்தே (அ)கி[2]லாண்டே[3]ச்வரி ॥ 3

இச்சா சக்தி, ஞான சக்தி முதலான சக்திகளனைத்தையும் கொண்டவளே, கருநீலமலர் போன்ற கருமை நிறம் பெற்றவளே, இந்திரன், விஷ்ணு ஆகியோருக்கு வரம் அருளுகின்றவளே, திருவானைக்கா தேவியே, சூரியனால் பூசிக்கப்பட்டவளே, வேள்விக்குரியவளே, மதி போன்ற முகத்தை உடையவளே, யானையால் வணங்கப்படுகின்றவளே, வேண்டிய பொருள் கிட்டுமாறு அருள்பவளே, இந்திராணியால் வணங்கப்படுகின்றவளே, ஆனைமுகனின் அன்னையே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

ஈசே ஈசவிரிஞ்சி சௌரிவரதே[3] ஈட்[3]யாலி ஈசாத்மிகே
ஈர்ஷ்யாதூ[3]ஷித சித்ததூ[3]ரசரணே ஈசப்ரியே ஈச்வரி ।
ஈட்[3]யே ஈச்வர வாமப[4]ாக[3] நிலயே ஈங்கார க்லுப்தோத[3]யே
ஈசித்வாதி[3] மஹாவிபூ[4]தி நிலயே வந்தே[3] (அ)கி[2]லாண்டே[3]ச்வரி ॥ 4

ஈசுவரியே, ஈசன், பிரமன், விஷ்ணு ஆகியோருக்கு வரமருள்கின்றவளே, துதிக்கப்படுகின்ற சிவபெருமான் தேவியே, ஈசனை சரீரத்தின் பகுதியாகக் கொண்டவளே, பொறாமைக் குற்றமுள்ள சித்தமுடையோருக்கு எட்டாத திருவடியை உடையவளே, ஈசனுக்குப் பிரியமானவளே, ஈசுவரியே, போற்றுதலுக்குரியவளே, ஈசுவரனின் இடப் பாகத்தில் இருப்பவளே, ஈம் என்ற ஒலியால் எழுப்பப்படும் ஆற்றலுடையவளே, ஈசித்துவம் முதலான மகாவிபூதிகளுக்கு உறைவிடமானவளே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

உத்3யத்3ப4ாநு ஸஹஸ்ரகோடிகிரணே
உர்வீத4ரேந்த்3ராத்மஜே
உத்பு3ல்லாம்பு3ஜ லோசனே உப4ய
காவேர்யந்தராலாச்ரயே |
உத்3யச்சந்த்3ர நிபா4நநே உருதரே உச்சாஸாநே
உஜ்ஜ்வலே
உத்3த3ாமத்3யுதி புஞ்ஜமஞ்ஜுலதரே வந்தே3
(அ)கி2லாண்டே3ச்வரி || 5

ஆயிரம் சூரியர்கள் உதயமானாற் போன்ற ஒளிக்கதிர்களை உடையவளே, மலையரசன் மகளே, அலர்ந்த தாமரை போன்ற முகத்தினளே, காவேரியின் இரு கிளைகளுக்கிடைப்பட்ட இடத்தில் இருப்பவளே, உதயமாகும் சந்திரனை யொத்த முகத்தை உடையளே, மிகப் பெரியவளே, மேலான ஆஸனத்தில் வீற்றிருப்பவளே, ஒளி பொருந்தியவளே, மிகுந்த ஒளிக்கதிர்க் கூட்டத்தினால் எழில் மிக்கவளே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

ஊஹாபோஹவிவேக ப3ாஹ்யநிலயே
ஊநாதிரிக்தோஜ்ஜ்வலே
ஊர்ஜஸ்வந்மணி மேக2லா விலஸிதே
ஊரீக்ருதார்த2ப்ரியே |
ஊர்த்4வாதே4ாத்2ப4வ யோக3மூலநிலயே
ஊஷ்மாபஹாரோஜ்ஜ்வலே
ஊத4:க்ஷீர ஸுதா4த்4ருத த்ரிபு4வனே வந்தே3
(அ)கி2லாண்டே3ச்வரி || 6

இப்படித்தான், இப்படியல்ல என்று பகுத்தறிதற்கு அப்பாற் பட்ட நிலையில் உள்ளவளே, சிறிதும் பெரிதுமான ஒளியானவளே, மிகுந்த ஒளியுள்ள மணிகள் பதித்த மேகலையினால் பிரகாசிக்கின்றவளே, வேண்டிய பொருளை வழங்குவதில் மகிழ்பவளே, மேல் கீழ் என்ற ஆதாரயோக மூலத்தில் இருப்பவளே, தாபத்தைப் போக்குவதில் புகழ் மிக்கவளே, திருமுலைப்பால் என்னும் அமுதத்தால் மூவுலகையும் உய்வித்தவளே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

ருக்[3]வேத[3]ாதி[3] நிஷேவிதே ருதுநதே ருத்[3]த[4]ாநு
கம்பாவஹோ
ருத்[3]த[4]ாமோத[4]முகே[2]ப்ஸிதே ருதுநுதே
ருக்ஷௌக[4] ஸம்ஸேவிதே |
ருக்ஷாதீ[4]ச கலாந்விதே ருணதமோ-
ப[4]ாஸ்வத்பத[3]ாம்பே[4]ருஹோ
ருத்[3]த்[4]யா பூரித விஷ்டபத்ரயநுதே
வந்தே[3](அ)கி[2]லாண்டே[3]ச்வரி || 7

ருக்வேதம் முதலானவற்றால் சேவிக்கப்பட்டவளே, ருதுக்களால் வணங்கப்பட்டவளே, நிரம்பிய கருணையுடையவளே, நிரம்பிய வாசனை பொருந்திய முகமுடையவளாய் விரும்பப்படுகின்றவளே, ருதுக்களால் துதிக்கப்படுகின்றவளே, சப்தரிஷிகளால் சேவிக்கப்படுகின்றவளே, சந்திர கலையோடு கூடியவளே, மேலான பூஜையால் பிரகாசிக்கின்ற திருவடித் தாமரைகளை உடையவ்ளே, ஐசுவரியம் நிரம்பிய மூவுலகங்களாலும் துதிக்கப்படுகின்றவளே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

ரூபாரூப ஸத[3]ாசிவாந்தரக[3]தே ரூபே ஸத[3]ா ரூபிணி
ரூபாதீதபராபரார்த[2]நிலயே ரூட[4]ப்ரரூட[4]ாத்மிகே |
ந்ருணும் ஜன்மஜராபஹார நிலயே ந்ருத்ராண
கல்பத்ரு[3]மே
ந்ருணும் பாபவிமோசனுத்[3]ய ப[2]லதே[3]
வந்தே[3](அ)கி[2]லாண்டே[3]ச்வரி || 8

உருவமாயும் அருவமாயுமுள்ள சதாசிவமூர்த்தியினுள் உறைபவளே, எழிலுருமாய் இருப்பவளே, என்றும் அழகியாயிருப்பவளே, உருவங்களைக் கடந்து நிற்பவளே, பரம் பொருளுக்கும் ஏனைய பொருள்களுக்கும் ஆதாரமாயிருப்பவளே, தோன்றிய பொருளுக்கெல்லாம் நிலைக்களமாயிருப்பவளே, மக்களின் பிறப்பு, மூப்பு ஆகியவற்றைப் போக்குபவளே, மக்களைக் காப்பதில் கற்பவிருட்சமாயிருப்பவளே, பாவ நீக்கம் முதலான பலன்களை மக்களுக்கு அளிப்பவளே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

க்லுப்தாசேஷ ஜக3ந்மஹேச நிலயே க்லுப்தாங்க3
ராகே3ாஜ்ஜ்வலே
க்லுப்தாக்லுப்த விசங்க்யமாந விலஸந்மத்4யாவலீ
ரஞ்ஜிதே ।
லிங்க3ாராத4ன தத்பரே லிகுசராஜத் பாணி-
பங்கேருஹே
க்லுப்தாகல்ப மநோஹராங்க3லதிகே
வந்தே3(அ)கிலாண்டே3ச்வரி ॥ 9

உலகனைத்தையும் தோற்றுவித்த மகேசனின் நிலையமாயிருப்பவளே, உடற் பூச்சு வகைகளால் சொலிக்கின்றவளே, உளதோ இலதோ என்று ஐயுறும்படியான, சோபிக்கின்ற இடையினால் அழகு வாய்ந்தவளே, இலிங்க பூசையில் பற்றுள்ளவளே, திருக்கைத் தாமரையில் விளங்கும் திராட்சைக் கொடி மலரை உடையவளே, என்றும் மனோகரமான அங்கங்களையுடைய கொடி போன்றவளே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

லூதாதீ4ச க3ஜேந்த்3ர பூஜிதபதே3 லூநாதேசாந்விதே
க்லீங்காராங்கித பி3ந்து3பீட2நிலயேக்லீங்கார
ரூபேடி3தே ।
லூதாதந்துஜடீ3க்ருதேச நிலயே லூநாஹிவல்லீத3லே
லூதாக்ஷ்மாபதி முக்தித3ாத்ருமஹிலே
வந்தே3(அ)கி2லாண்டே3வரி ॥ 10

சிலந்தியாலும் யானையாலும் பூசிக்கப்பட்ட திருவடிகளை உடையவளே, தீமையைப் போக்கும் ஈசனோடு கூடியவளே, க்லீம் என்ற மந்திர ஒலியால் கட்டப் பெறும் பிந்து பீடத்தில் அமர்ந்திருப்பவளே, க்லீம் என்ற மந்திரத்தினுள் போற்றப்படுபவளே, சிலந்தி நூலால் நீர்மயமாக்கப்பட்ட ஈசனுக்கு நிலயமாயிருப்பவளே, கிள்ளிப் போடப்பட்ட நாகவல்லி இதழ்களோடு கூடியவளே, சிலந்திக்கும் வேந்தனுக்கும் முத்தியளித்த அம்மையே, அகிலாண்டேசுவரி உனக்கு, வணக்கம்.

ஏகே ஏக மஹாம்பு^{3}ராசிநிலயே ஏகாந்த
க்லுப்தோத^{3}யே
ஏகாநேகதயா விப^{4}க்த பு^{4}வநே ஏகாதபத்-
ரோஜ்ஜ்வலே |
ஏணீசாருவிலோல லோசனயுகே^{3} ஏகாவலீ பூ^{4}ஷணே
ஏதத் தத்வமயாணிமாதி^{3}வரதே^{3}
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 11

ஒப்பற்றவளே, கடல் போன்ற நீர்ப்பகுதியை நிலயமாகக் கொண்டவளே, தன்னிகரில்லாப் பெருமை உடையவளே, ஒன்றும் பலவாயுமுள்ள உலகங்களைத் தனதாகக் கொண்டவளே, ஒரே குடையின் கீழ் பிரகாசிக்கின்றவளே, மானின் மருண்ட கண்கள் போல் அலைபாயும் கண்களை உடையவளே, ஏகாவலீ என்னும் அணியை அணிந்திருப்பவளே, தத்துவமயமான அணிமா முதலிய சக்திகளைத் தரவல்லவளே, அகிலாண்டேசுவரி, உனக்கு வணக்கம்.

ஐங்காராஸந மத்^{4}யபீட^{2}நிலயே ஐந்த்^{3}ராதி^{3}
லோகப்ரதே^{3}
ஐராவத்யுபமாநதேஹலதிகே ஐந்த்^{3}ர்யாதி^{3}
சக்தீடி^{3}தே |
ஐங்காராக்ஷர வேத^{3}வேத்^{3}ய விப^{4}வே ஐச்வர்ய
தாநேக்ஷணே
ஐமைமித்யநுஸந்த^{3}த^{3}ாந பு^{4}வனே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 12

'ஐ' எனும் அக்ஷர வடிவுள்ள ஆசனமத்திய பீடத்தில் அமர்ந்திருப்பவளே, இந்திரலோகம் முதலானவற்றை அளிப்பவளே, ஐராவதோபமானமாகக் கருதத் தக்க கொடி போன்ற உடலை உடையவளே, ஐந்திரீ முதலான சக்திகளால் போற்றப்படுகின்றவளே, ஐங்காரம் என்னும் மந்திரத்தாலும் வேதங்களாலும் கண்களை உடையவளே, ஐம் ஐம் என்று தொடர்ந்து நினைத்து தியானிப்பதற்கு உரியவளே, அகிலாண்டேசுவரி, உனக்கு வணக்கம்.

ஓமித்யேக பத^3ாவலீடி^{3}தபதே^{3} ஓஜோவிசேஷாந்விதே
ஓஷ்ட^2ாத^4ாவித பி^{3}ம்ப^3 வித்^{3}ருமலதே
ஓக^{4}த்ரயாராதி^{4}தே ।
ஓகை^{4}ரப்ஸரஸாம் ஸத^3ா பரிவ்ருதே ஓதாகிலார்த^2ாதி^{4}பே-
ஓஜோராஜித வாக்^{3}விபூ^{4}தி விநுதே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 13

ஓமெனும் ஒப்பற்ற சொல்லைத் தொடர்ந்து ஓதி வழிபடப்பட்ட திருவடிகளை உடையவளே, தலைசிறந்த சக்தி பொருந்தியவளே, பவழக்கொடியை விரட்டியடித்த சிவந்த உதடுகளை உடையவளே, முந்நீராலும் ஆராதிக்கப்படுகின்றவளே, அப்ஸர மகளிர் கூட்டத்தால் என்றும் சூழப்பட்டிருப்பவளே, ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்ட பொருள்களனைத்திற்கும் தலைவியே, ஓஜஸ் என்னும் சப்த குணத்தால் பிரகாசிக்கும் மேலான வாக்குகளால் துதிக்கப்படுகின்றவளே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

ஔசீராதி^{3}ஸுக^{3}ந்தி^{4} சோப^{4}நகசே ஔத்பத்தி ஜாலப்ரியே
ஔத^3ாஸீன்யவிபி^{4}ன்ன தை^{3}த்ய விப^{4}வே
ஔபாதி^{4}கோபாந்விதே ।
ஔத^3ார்யாகர பாத^3 பங்கஜயுகே^{3} ஔபம்யஹீநாநநே
ஔமாகாந்தபத^3 ப்ரத^3ார்திஹபதே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 14

வெட்டிவேர் முதலான பொருள்களால் வாசனையூட்டப்பட்ட கூந்தலை உடையவளே, மீண்டும் மீண்டும் தோற்றுவிக்கப்படும் (சிலந்தி) வலையில் பிரியமுடையவளே, பல்வேறு அரக்கர்களையும் உதாசினப்படுத்துவதால் பெருமை பெற்றவளே, தக்க ஒரு காரணம் நேரும்போது கோபம் கொள்பவளே, பெருந்தன்மைக் கடல் என்னும்படியான இரு திருவடித் தாமரைகளை உடையவளே, தனக்குவமை இல்லாத முகத்தை உடையவளே, சிவபதத்தை அளித்து துன்பத்தைப் போக்கக் கூடிய பாதங்களை உடையவளே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

அம்பே4ாஜாஸந முக்2ய ஸேவிதபதே3
அம்பே4ாத4ர ச்யாமலே
அங்கா3கல்பித ரத்னபூ4ஷணசதே
அண்டை3ளக4ஸம்ஸேவிதே।
அம்ப்3வாகாசதயா விப4க்த பு4வநே
அம்பே4ாருஹாங்க்4ரித்3வயே
அஹ்நாயாந்தகஸூ3தந ப்ரியதமே
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி ॥ 15

தாமரையில் வீற்றிருக்கும் பிரமன் முதலானோரால் சேவிக்கப் பட்ட திருவடிகளை உடையவளே, மேகம்போல் கறுத்தவளே, ரத்தினங்கள் பதித்த அணிகள் பல அணிந்தவளே, எல்லா அண்டங்களாலும் சேவிக்கப்பட்டவளே, நீர் ஆகாயம் என்பவற்றால் வேறுபடுத்தப்பட்ட புவனங்களை உடையவளே, தாமரை போன்ற திருவடிகளை உடையவளே, யமனை அழித்த சிவபெருமானிடம் நெருங்கிய பிரியமுடையவளே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

அஸ்தாகே4 அவநம்ர தே3வநிவஹே அஸ்தோக-
ப4ாக்3யோத3யே
அர்த4ாதி4க்ய மநோஹரே அசலஜே
அஷ்டாக்ஷரைரர்ச்சிதே।
அர்கா4தீதமநோஜ்ஞ பூ4ஷணசதே அக்ஷீண
ஸௌப4ாக்யதே3
அர்காம்பே4ாருஹ வைரிவஹ்நிநயநே
வந்தே3(அ)கி2லாண்டேச்3வரி ॥ 16

குற்றமற்றவளே, வணங்கும் தேவர் கூட்டத்தை உடையவளே, பெருகிக் கொண்டிருக்கும் மிகுதியான பாக்கியத்தை உடையவளே, (அர்த்தநாரீஸ்வர வடிவத்தில்) உமையின் பாதி மிகுதியும் மனோகரமாயிருக்கும் பெருமை உடையவளே, மலை மகளே, அஷ்டாக்ஷரங்களரல் பூசிக்கப்படுகின்றவளே, விலை மதிக்க முடியாத அழகிய பல அணிகளைப் பூண்டவளே, குறைவற்ற சௌபாக்கியத்தைத் தருபவளே, அர்க்கபத்ரம், தாமரை ஆகிய வற்றுக்கு வைரியான அக்னியைக் கண்ணாக உடையவளே அகிலாண்டேசுவரி, உனக்கு வணக்கம்.

காவேரீபுலினாலயே கமலஜே காமாரிவாமாலயே
காருண்யாம்ருத லோசனே கவிநுதே கந்த^{3}ர்ப
காந்திப்ரதே^{3} |
கல்யாணி க்ஷிதிலோக கல்பலதிகே காருண்ய
வாராந்நிதே^{4}
காலாம்பே^{4}ாத^{4}ர கம்ரகுண்ட^{3}லத^{4}ரே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 17

காவேரிக்கரையில் குடி கொண்டிருப்பவளே, தாமரையில் தோன்றியவளே, காமனை அழித்த சிவபிரானின் இடப் பாகத்திலிருப்பவளே, காருண்யாமிருதம் பொழியும் கண்களை உடையவளே, கவிகளால் போற்றப்பட்டவளே, மன்மதனுக்குக் காந்தியை அளித்தவளே, கல்யாணி, பூவுலகில் கல்பவல்லியாயிருப்பவளே, கருணைக் கடலே, கருமேகத்தையே அழகிய குண்டலமாக அணிந்தவளே, அகிலாண்டேசுவரி, உன்னை வணங்குகிறேன்.

க^{2}ர்வாடே க^{2}க^{3}கேதநாநுஜவரே க^{2}ட்வாங்க^{3}
பாணிஸ்துதே
க^{2}ர்வாக^{2}ர்வவிவர்ஜிதே க^{2}க^{3}மயூக^{2}ாராதி^{4}தே
க^{2}ட்கி^{3}நீ |
க^{2}த்^{3}யோதேச வரப்ரதே^{3} க^{2}க^{3}நுதே க^{2}த்^{3}யோத
கோடிப்ரபே^{4}
க^{2}ண்டே^{3}ந்தூ^{3}ஜ்ஜ்வலசேக^{2}ரே க^{2}க^{3}சரே
வந்தே^{3}(அ)கி^{3}லாண்டே^{3}ச்வரி || 18

சிதைந்த பகுதிகளில் திரிபவளே, கருடக் கொடியோனுக்கு உடன் பிறந்த பெருமைக்குரியவளே, மண்டையோடு பொருத்தப் பெற்ற தடியை ஏந்திய கையினரால் துதிக்கப்படுகின்றவளே, சிறுமை பெருமைகளுக்கப்பாற்பட்டவளே, சூரிய கிரணங்களால் ஆராதிக்கப்படுபவளே, கத்தி ஏந்தியவளே, ஆதவனுக்கு வரம் அருளியவளே, சூரியனால் போற்றப்பட்டவளே, கோடி சூரியப் பிரகாசமானவளே, பிறையை முடியில் அணிந்தவளே, அன்னத்தில் அமர்ந்து சஞ்சரிக்கின்றவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

க^{3}ங்க^{3}ாவர்தஸ்மாநநாபி^{4}குஹரே
க^{3}ண்டே^{3}ாஜ்ஜ்வலத் குண்ட^{3}லே
க^{3}ந்த^{4}ர்வாஸுர ஸித்^{3}த^{4}கிந்நர நுதே
க^{3}ந்தோ^{4}த்தமாலேபிதே |

க3ம்பீ4ராம்ருதஸிந்து4மத்4ய நிலயே கா3ம்பீ4ர்ய
தை4ர்யாதி4கே4
க3ங்கோ3த்துங்க3 தரங்க3சேக2ரயுதே
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி ॥ 19

கங்கை நதியின் சுழலையொத்த நாபிக் குழியை உடையவளே, கன்னத்தில் பிரகாசிக்கிற குண்டலங்களை உடையவளே, கந்தர்வர், அசுரர், சித்தர், கின்னரர் ஆகியோரால் வணங்கப்படுகின்றவளே, சிறந்த வாசனைத் திரவியப் பூச்சை உடையவளே, ஆழம் மிக்க அமுதக் கடலின் மத்தியில் வீற்றிருப்பவளே, கம்பீரமும் தைரியமும் மிக்கவளே, உயர எழும்பும் அலைகளோடு கூடிய கங்கையை முடியில் கட்டிப் போட்டவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

கீ3தாநந்த3மயே கி3ரீசநமிதே கீ3தப்ரியாராதி4தே
கீ3தோல்லாஸிநி கீ3யமாந சரிதே கீ3ர்நாத3
ஸம்ஸேவிதே ।
கீ3ஷ்பத்3மாவரதே3 கி3ரீந்த்3ர நிலயே
கீ3ர்வாணப்3ருந்த3ாஞ்சிதே
கீ3தே கீ3தமநோஹரே கி3ரிஸுதே
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி ॥ 20

கீதங்களைக் கேட்டு ஆனந்தமயமாயிருப்பவளே, ருத்திரனால் வணங்கப்படுகின்றவளே, பாடகர்களால் பூசிக்கப்படுகின்றவளே, கீதத்தைக் கேட்டு உல்லாசப்படுகிறவளே, பாட்டின் பொருளாக உள்ள பராக்கிரமச் செயல்களை உடையவளே, பிரம்மனால் சேவிக்கப்படுகின்றவளே, ஸரஸ்வதி, லக்ஷ்மி ஆகியோருக்கு வரம் அருள்பவளே, இமயத்தை இருப்பிடமாகக் கொண்டவளே, தேவர் குழாத்தால் பூசிக்கப்படுகிறவளே, துதிக்கப்படுகிறவளே. கீதத்தினால் மனோகரமாயிருப்பவளே, மலைமகளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகின்றேன்.

கு3ப்தே கு3ப்ததரே கு3ஹேசவரதே3
கு4ச்சே2ாஜ்ஜ்வலந் மல்லிகே
கு3ஹ்யாசாரக3தே கு3ருஸ்தநப4ரே
கு3ச்ச2ார்த4 ஹாரோஜ்ஜ்வலே ।
கு3ல்ப2ஸ்தே2 கு3ணமந்தி3ரே கு3ருவரே
கு3ல்பே2ால்லஸந்நூபுரே
கூ3ட4ார்த2ாந்தக3தே கு3ருத்தமநுதே
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி ॥ 21

மறை பொருளாயிருப்பவளே, மிக சூக்குமமாயிருப்பவளே, குகனுகிற ஈசனுக்கு வரம் அருள்பவளே, (சூடப்பட்ட) மல்லிகைக் கொத்தினுல் பிரகாசிக்கின்றவளே, மறைவாகச் செய்யப்படும் ஆசாரங்களில் ஈடுபடுபவளே, பருத்த தனங்களை உடையவளே, அறுபது சரங்கள் கொண்ட கழுத்திலணியும் ஆரத்தால் பிரகாசிக்கின்றவளே, கணுக்காலில் நிற்பவளே, குணங்களுக்கோர் உறைவிடமானவளே, பெருமையினுல் விரும்பப்படுகிறவளே, கணுக்காலில் சதங்கை அணிந்தவளே, மறை பொருளில் மறைந்திருப்பவளே, சிறந்த குருமார்களால் போற்றப்படுகின்றவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

க4ண்டாகே4ார நிநாத3 க4ாதிதமஹாதை3த்யே
க4னச்யாமலே
க3ர்மாக3ர்ம மயூக2வஹ்நிநயநே
க4ர்மப்ரசாந்திப்ரதே3 |
கே4ாராகே4ார விகே4ாஷத3ா நவக3ண
ப்ரோத்3கு4ஷ்டகே4ாராரவே
கே4ாராகெ4ளக4 நிவாரணே க4னநிபே4
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி || 22

தனது மணியின கோர ஒலியினுலேயே கொல்லப்பட்ட பெரும் அசுரர்களை உடையவளே, மேகம் போல் கருத்தவளே, சூரியன், சந்திரன், அக்னி ஆகிய மூவரையும் கண்களாக உடையவளே, வெப்பத்தை அடக்குபவளே, கோரமான அகோரர் எழுப்பிய கோஷத்துடன் அசுர கணங்கள் எழுப்பிய கோஷமும் சேர்ந்த பேரொளியை தோற்றுவிப்பவளே, கோரமான பாவங்களையும் போக்குபவளே, மேகத்தை ஒத்தவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

சாதுர்வர்க்3ய ப2லப்ரதே3 ஸுசரிதே சாமுண்டி3
ரூபோத்தரே
சக்ராதி4ஷ்டி2த பாத3பத்3ம சதுரே சந்த்3ர3ாநநே
சண்டி3கே |
சந்த்3ரோபேந்த்3ர சராசராத்மக ஜக3த்ரூபே
சலத்குண்ட3லே
சஞ்சல்லோசன வஞ்சிதேச்வரசிவே
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி || 23

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகைப் பயன்களையும் தருபவளே. நற்செயல் புரிபவளே. சாமுண்டி என்னும் மேலான உருவத்தை உடையவளே, ஸ்ரீசக்ரத்தில் ஊன்றி நிற்கும் பாதத் தாமரையோடு கூடி சதுரப்பாடு கொண்டவளே, மதிமுகத்தாளே, சண்டிதேவியே, சந்திரன், திருமால் மற்றும் சராசரங்கள் அடக்கிய பிரபஞ்சமே உருவானவளே, அசைகின்ற குண்டலங்களை உடையவளே, கண்களின் அசைவினால் மையல் கொண்ட ஈசுவரனை உடைய சிவையே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

சி^{2}த்^{3}ரக்^{4}னஸ்மித சந்த்ரிகாத^{4}வலிதே ச^{2}ாயேச்வர
த்^{3}யோதிதே
ச^{2}ந்த^{3}ாந்தே^{3}ாலித பூ^{4}ஷணுங்கிதக^{3}லே
ச^{2}ந்த^{3}ச்ரியாலங்க்ருதே ।
ச^{2}ாயா[illegible]^{4}ச த^{4}நஞ் ஜயேந்து^{3}நயநே
ச^{2}ந்நாந்த^{4}காராருணே
ச^{2}ந்தே^{3}ாப்^{3}ருந்த^{3}[illegible]ஹஸ்ஸ[illegible]காந்தி நிலயே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி ॥ 24

வஞ்சனையைப் பொடிபடுத்தும் புன்முறுவல் என்னும் வெண்ணிலவால் வெண்மையானவளே, சூரியனாகிற கண்ணால் பிரகாசிக்கின்றவளே, அழகாக அசைகின்ற அணிகளால் அணி செய்யப்பெற்ற கழுத்தை உடையவளே, சந்தம் என்ற பெயரால் வழங்கும் முத்தணிகளின் அழகால் அலங்கரிப்பட்டவளே, சூரியன், அக்னி, சந்திரன் ஆகியவற்றைக் கண்களாக உடையவளே, இருள், ஒளி, இரண்டிலும் மறைந்திருப்பவளே, வேதச் சந்தங்களின் பெருமைக்கும் ஒளிக்கும் உறைவிடமானவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

ஜம்பூ^{3}மூலநிதே^{4} ஜநார்த^{3}னநுதே
ஜம்ப^{4}ாரிஸம்ப^{4}ாவிதே
ஜம்பூ^{3}த்^{3}வீப மநோஜ்ஞகல்பலதிகே
ஜஹ்நவாத்மஜா சேக^{2}ரே ।
ஜந்மவ்யாதி^{4}ஜராபஹே ஜலமயே ஜாம்பூ^{3}
நத^{4}ாலங்க்ருதே
ஜம்பூ^{3}நாத^{2} மநோஹரே ஜநநுதே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி ॥ 25

நாவல் மரத்தடியில் வீற்றிருக்கும் நிதியே, விஷ்ணுவால் போற்றப்படுவளே, இந்திரனால் பூசிக்கப்பட்டவளே, ஜம்புத் தீவின் அழகிய கல்பகக் கொடியே, கங்கையை முடியிலணிந்தவளே, ஜலமாய் இருப்பவளே, தங்கத்தால் அலங்கரிக்கபட்டவளே, ஜம்பு நாதனை மகிழ்விப்பவளே, மக்களால் போற்றப் படுபவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

ஜ^{2}ஞ்ஜ^{2}ாவாததரங்கி^{3}த ப்ரவிமல
ஸ்ரீ நிர்ஜ^{2}ராப்லாவிதே
ஜ^{2}ங்காரீக்ருத ஷட்பத^{3}ாலகப^{4}ரே
ஜாடித்யபு^{3}த்^{3}தி^{4} ப்ரதே^{3} |
ஜ^{2}ர்ஜ^{2}ராராரவபூ^{4}ஷணே ஜ^{2}லஜ^{2}ந்மஞ்ஜீர
பாத^{3}ாம்பு^{3}ஜே
ஜ^{2}ல்லீமத்^{3}த^{3}ள ஜ^{2}ர்ஜ^{2}ரஸ்வநநுதே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 26

'ஜஞ்ஜா' வெனும் ஒலி செய்யும் காற்றினால் எழுதப்பட்ட அலைகளோடு கூடிய தெளிந்த அழகிய நீர் வீழ்ச்சியால் அபிஷேகம் செய்யப்பட்டவளே, ஜங்கார ஒலியை எழுப்பும் வண்டுகளால் சூழப்பட்ட அளகபாரத்தை உடையவளே, விரைவில் ஞானத்தைத் தருபவளே, ஜர் ஜர் என்ற ஒலி எழுப்பும் அணிகள் பூணப் பெற்றவளே, 'ஜல் ஜல்' என்ற இனிய ஒலி எழுப்பும் கொலுசினால் அணி செய்யப்பட்ட திருவடித் தாமரையை உடையவளே, ஜல்லி மத்தளத்தின் 'ஜர் ஜர்' என்ற ஒலியினால் வழி படப் படுகின்றவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

ஜ்ஞாநாந்த^{3} மஹாஸமுத்^{3}ர தரணே ஜ்ஞானாத்ம
ரூபாபரே
ஜ்ஞானஜ்ஞேயமயே த்வதங்க்^{4}ரி ப^{4}ஜதாம்
ஜ்ஞானப்ரதே^{3}(அ)ஜ்ஞானினாம் |
ஜ்ஞானஜ்ஞானமய ஸ்வரூபிணி சிவஜ்ஞான-
ப்ரகாசப்ரதே^{3}
ஜ்ஞாதிக்ஷேத்ர கலத்ரத^{4}ாந்யத^{4}னதே^{3}
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 27

ஞானமாகிற ஆனந்தப் பெருங்கடலில் எம்மைச் செலுத்துப வளே, ஞானமே தனது உருவமாகக் கொண்ட தன்னிகரில்லாத் தன்மையளே, அறிவாயும் அறியப்படு பொருளாயும் உள்ளவளே, நின் திருவடியைப் போற்றும் அறிவிலிகளுக்கும் ஞானத்தை ஊட்டுகின்றவளே, அறிவு அறியாமையாகிற இரண்டு மயமாயும் உள்ள சொரூபத்தை உடையவளே, சிவஞான ஒலியை அளிப்ப வளே, சுற்றம், நிலம், மனைவி, தானியம், பொருள் ஆகியவற்றைத் தருபவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

டங்காத்3யாயுத4 பூ4ஷணோஜ்ஜ்வலகரே
டா2ாவேக்ஷ்யமாநாநநே
டி3ம்பா ஹூங்க்ருத டா4ங்க்ருதாஸுரசரே
டோ3லாடி3டே4சஸ்மிதே ।
டி3ம்ப3ாகாரதயா ஸுபாலிதஜநே டக்காரவோத்
கே4ாஷிதே
டா4ண்டா4ண்டே3தி ஜ2டிக்வணுதிமஹிதே
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி ॥ 28

உளி முதலான ஆயுதங்களால் அணி செய்யப்பெற்றுப் பிரகா சிக்கின்ற கைகளை உடையவளே, ठ என்னும் அக்ஷரம் போல் தோற்றமளிக்கும் முகத்தை உடையவளே, குழந்தைகளைப் போல் ஹூங்கார ஒலியையும் டங்கார ஒலியையும் செய்யும் அசுரர்களின் மீது எறியப்பட்ட அம்புகளை உடையவளே, ஆடும் ஊஞ்சலில் அமர்ந்திருக்கும் பறவையும் பாம்பையும் கண்டு முறுவளிக்கும் தேவியே, குழந்தைகளைப் போன்ற மக்களை நன்முறையில் பரிபாலிக்கின்றவளே. உடுக்கை ஒலியை எழுப்புகின்றவளே, டண் டண் என்றும் ஜடித் என்றும் எழுப்பப்படுகின்ற ஒலிகளால் பெருமை பாராட்டப்படுபவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

தத்வார்த்த2 ப்ரதிபாத்3யமாந சரணே
தத்வத்ரயோத்3தீ3பிகே
தத்வாதீதபதே3 தபோத4நநுதே தாரேச
சூடாமணே ।
தாருண்யாம்ருத ஸிந்து4மத்4யலதிகே
தார்க்ஷ்யத்4வஜாராதி4தே
தாபிஞ்ச2ஸ்தபகத்3யுதே தநுலதே
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி ॥ 29

தத்துவார்த்தங்களுக்குப் பொருளாக விளங்கும் திருவடியை உடையவளே, கடவுள், உயிர், உலகம் என்ற முப்பொருளுக்கும் விளக்கமாய் இருப்பவளே, தத்துவம் கடந்த நிலையில் இருப்பவளே, தவசிகளால் போற்றப்படுகின்றவளே, முடியில் பிறையணிந்த பெருமாட்டியே, இளமையெனும் அமுதக் கடலின் மத்தியில் வளர்ந்த பூங்கொடியே, கருடக் கொடியோனால் ஆராதிக்கப் பட்டவளே, தமால மலர்க் கொத்து போல கருமை நிறத்தவளே, இளங்கொடியே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

ஸ்தா^{2}ணுப்ரேமநிதே^{4} ஸ்தி^{2}தீச மஹிதே ஸ்தை^{2}ர்ய
ஸ்தி^{2}தே ஸ்தா^{2}பிகே
ஸ்தா^{2} நாஸ்தா^{2}நக்ருதார்த^{2} தே^{3}ஹி
நிவஹஸ்தி^{2}த்யந்த ஸர்கோ^{3}த்ய^{3}தே |
ஸ்தா^{2}நாதி^{4}க்ய மநோஹரே ஸ்தி^{2}ரதர-
ஸ்தா^{2}ண்வந்தராலாச்ரயே
ஸ்தூ^{2}லாகோ^{3}சரத^{3}ர்சனே ஸ்தி^{2}திமயே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 30

தாணுவெனும் சிவனின் அன்புக் களஞ்சியமே, விஷ்ணுவால் போற்றப்பட்டவளே, ஸ்திரத் தன்மையால் ஊன்றியவளே, எதையும் நிலை நிறுத்துகின்றவளே, உயர்ந்ததும் இழிந்ததுமாக அதனதற்கேற்றவகையில் அமைந்துள்ள உயிர்களின் பிறப்பு, இருப்பு, இறப்பு ஆகிய மூன்றையும் அருள்கின்றவளே, உயர்ந்த ஸ்தானத்தில் அழகாய் வீற்றிருப்பவளே, மிகவும் ஸ்திரமாக தாணுவினுள்ளே வீற்றிருப்பவளே, தூலமாகக் காணவியலாதவளே, உள்ளதனைத்திலும் வியாபித்திருப்பவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

தா^{3}க்ஷாசாரவரப்ரதே^{3} த^{3}மயுதே த^{3}க்ஷ
த^{3}யாங்கூரிதே
தா^{3}ந்தே த்^{3}ரஷ்ட்ருமநோஹரத்விஜவரே
த^{3}ந்தாவலாராதி^{4}தே |
தா^{3}நாதா^{3}நவிதா^{3}நசோத^{3}நபரே
தா^{3}த்ருஸ்வரூபாபரே
தை^{3}ந்யாத^{3}யாத்மிகதாபஹாரிசரணே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 31

நன்னெறியில் ஒழுகுகின்றவர்களுக்கு வரம் அருள்கின்றவளே, புலனடக்கம் உடையவளே, திறமை வாய்ந்தவளே, அருள் சுரப்பவளே, தன்வயமானவளே, பார்ப்போர் உள்ளங் கவர் பிராம மணியே, யானையால் பூசிக்கப் பட்டவளே, கொடுத்தல் எடுத்தல், விசேஷமான தானம் செய்தல், செயற் படுத்துதல் முதலியவற்றில் ஈடுபட்டிருப்பவளே, வள்ளன்மையே, சொரூபமாக உள்ள எல்லாவற்றிற்கும் மேலான தெய்வமே, ஏழ்மை, உயிரைப் பற்றிய தாபங்கள் ஆகியவற்றைப் போக்கும் திருவடியை உடையவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

தி³வ்யஜ்ஞானமயே தி³வாகர நிபே⁴
தி³வ்யாம்ப³ராலங்க்ருதே
தி³வ்யஸ்த்ரீ ஜநஸேவிதே த்³விஜமயே
தீ³க்ஷாப்ரத³ாஞோத்³யதே |
தீ⁴ப்தே தீப்³தசசாங்கவஹ்நிநயநே
தீ³நாதிமுக்திப்ரதே³
தி³க்பாலாதி³ தி³க³ம்ப³ரார்ச்சிதபதே³
வந்தே³(அ)கி²லாண்டே³ச்வரி || 32

திவ்விய ஞானமயமானவளே, சூரியனையொத்த ஒளிமிக்கவளே, திவ்வியமான ஆடைகள் அணியப் பெற்றவளே, தேவ மாதரால் சேவிக்கப்பட்டவளே, இருகூறாய் இருப்பவளே, தீட்சை தருவதில் ஈடுபாடு கொண்டவளே, பிரகாசிக்கின்றவளே, சூரியன், சந்திரன், அக்கினி ஆகியவற்றை மூன்று கண்களாக உடையவளே, எளியவர் முதலானோருக்கும் முக்தியளிப்பவளே, திக்பாலகாதிகளாலும் திகம்பரரான சிவனாலும் பூசிக்கப்பட்ட திருவடியை உடையவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

துர்பி⁴க்ஷாதி ஸமஸ்த து:³க²ஹரணே
து³சீலதாபாபஹே
து³ர்க³ாத்³யாவ்ருதிதே³வதார்சிதபதே³
தூ³ர்வாங்குரச்யாமலே !
து³ர்லக்ஷ்யாக³ம சித்ததூ³ரசரிதே து³ர்க³ா-
து³வஸ்யாபரே
து³ர்வாஸாதி³ முநீச்வரஸ்துதிபதே³
வந்தே³(அ)கி²லாண்டே³ச்வரி || 33

பஞ்சம் முதலான எல்லா துயரங்களையும் போக்குகின்றவளே, தீய வொழுக்கத்தால் விளையும் பாவங்களைப் போக்குகின்றவளே, துர்கை முதலான பரிவார தேவதைகளால் போற்றப்பட்ட திருவடியை உடையவளே, அருகம்புல் போன்று கரிய மேனியளே, வேதாகமங்களாலும் மனத்தாலும் எட்டிப் பார்க்க முடியாத அருஞ்செயல் புரிபவளே, துர்க்கம் முதலானவற்றில் வசிப்பதில் விருப்பமுள்ளவளே, துர்வாசர் முதலான முனிவர்களால் துதிக்கப்படுகின்றவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

த4ர்மிஷ்டே2 த4ரணீத4ரேந்த்3ரதநயே
த4ராராத4ரோத்3யத்ப்ரபே4
த4ம்மில்லாஞ்சித மல்லிகாதி3 குஸுமே
த4ர்மாதி3 ஸம்ஸேவிதே |
த4ர்மாத்3யர்த2 சதுஷ்டய ஸ்தி2திபதே3
தா4மத்ரயாராதி4தே
த4ந்யே தா4ர்மிக சித்த நித்ய நிலயே
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி || 34

அறநெறியில் நிற்பவளே, மலையரசன் மகளே, மேகம் போன்ற பொலிவுடையவளே, மல்லிகை முதலான மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலை உடையவளே, தர்மம் முதலானவற்றால் சேவிக்கப்படுகின்றவளே, அறம் பொருள் முதலான நான்கு புருஷார்த்தங்களுக்கும் நிலைக்களமாயிருப்பவளே, மூவுலகங்களாலும் ஆராதிக்கப்படுகின்றவளே, ஐசுவரியம் நிரம்பியவளே, தார்மிகர்களின் உள்ளத்தில் என்றும் குடி கொண்டிருப்பவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

நாநாரத்ன விபூ4ஷணே நவக4னச்யாமே
நடேசப்ரியே
நக்ஷத்ரேசத4ரே நகே3ந்த்3ர நிலயே நாகா3ரி
வாஹாநுஜே |
நாநாதே3வவ்ருதே நரோத்தமநுதே நாதே2
ந்ருமுக்திப்ரதே3
நாகௌகோக3ண நம்யமாந சரணே
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி || 35

பலவகை இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற அணிகளை அணிந்தவளே, புது மேகம் போன்று கருத்தவளே, நடேசப் பெருமானுக்குப் பிரியமானவளே, சந்திரனை அணிந்தவளே, இமயமலையில் வசிப்பவளே, கருட வாகனனின் தங்கையே, பலவகைத் தேவர்களால் சூழப்பட்டவளே, புருஷோத்தமனால் துதிக்கப்பட்டவளே, நாயகியே, மக்களுக்கு முக்தியளிப்பவளே, தேவர்களால் வணங்கத் தக்க திருவடியை உடையவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

நீஹாராசலகந்யகே நிக³மகே³ நித்யாத்மிகே
நிர்மலே
நிச்சேஷாண்ட³ஸமாத்ருகே நிசிசராராத்⁴யே
நிசீசாங்கி(ஞ்சி)தே ।
நீபாரண்ய நிவாஸ நித்ய ரஸிகே
நிர்நித்³ரபத்³மேக்ஷணே
நிச்சோகாக்ருதிகே நிரஞ்ஜநபதே³
வந்தே³(அ)கி²லாண்டே³ச்வரி ॥ 36

இமவான் புதல்வியே, வேதத்தினால் அறியப்படுபவளே, என்றும் உள்ளவளே, குற்றமற்றவளே, அகிலாண்டத்திற்கும் தாயே, அரக்கர்களாலும் ஆராதிக்கப்பட்டவளே, சந்திரனால் சேவிக்கப்படுகின்றவளே, கடம்ப வனத்தில் வசிப்பதில் எப்போதும் பிரியமுள்ளவளே, எப்போதும் மலர்ந்திருக்கும் தாமரை போன்ற கண்களை உடையவளே, சோகக் குறி அறவே இல்லாத உருவத்தை உடையவளே, தூய திருவடிகளை உடையவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

பத்³மே பத்³மநிப⁴ாநநே பரதரே
பத்³மார்சிதாங்க்⁴ரித்³வயே
பத்³மஸ்தே² பரத³ாநவாரிவிநுதே
பத்³மாஸநாராதி⁴தே ।
பத்³மாஸ்யே பரலோக ஸாத⁴நபரே
பஞ்சாக்ஷராலங்க்ருதே
பக்ஷாபக்ஷ விவர்ஜிதே பரசிவே
வந்தே³(அ)கி²லாண்டே³ச்வரி ॥ 37

செல்வியே, தாமரையொத்த முகத்தினளே, எல்லாவற்றிற்கும் மேலானவளே, லக்ஷ்மியால் பூசிக்கப்பட்ட திருவடிகளை உடைய வளே, (இதயத்) தாமரையில் வீற்றிருப்பவளே, மேன்மை பொருந் திய யானையால் துதிக்கப்பட்டவளே, பத்மாசனத்தில் வீற்றிருக் கும் பிரமனால் பூசிக்கப்பட்டவளே, நீலத்தாமரை (போன்ற கண் களை) முகத்தில் உடையவளே, மேலுலகை அடைவதற்குச் சாதன மாக இருப்பவளே, பஞ்சாக்ஷரங்களால் ஆராதிக்கப்பட்டவளே, தன் பக்கம் பிறர் பக்கம் என்ற வேறுபாடற்றவளே, மேலான சிவையே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

பு2ல்லாம்பே4ாஜத3லேக்ஷணேந்து3
விக்ருதாலீகாபி4ராமநநே
பூ2த்காராஹிப2ணுத4ரேந்த்3ர ரமணீ
ந்ருத்தாந்தராலஸ்தி2தே |
ஸ்ப2ாயத்பண்டி3த ஸூக்திமர்மவிப4வே
ஸ்ப3ாடிக்ய தேஜோமய-
ஸ்பூ2ர்ஜத்காந்திமயே ப2ணீந்த்3ரவரதே3
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி || 38

அலர்ந்த தாமரை மலர் போன்ற கண்கள் (ஒரு புறம்) சந்தி ரன் (ஒரு புறம்) (இப்படி முரண்பட்டவற்றால்) மாறுபட்ட அழகோடு கூடிய முகத்தினளே, 'பூத்' என்று சப்தம் செய்கின்ற சர்ப்பங்களும், நாக கன்னியரும் நடமாடுமிடத்தில் இருப்பவளே, பெருக்கெடுத்து வழியும் புலவர்களின் துதிப்பாடல்களின் கரு வின் திருவாய் இருப்பவளே, படிகம் போன்று தேஜோமயமாக ஒளிவிடும் காந்தியை உடையவளே, பதஞ்சலிக்கு வரம் அருள்ப வளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

ப3ாலே(அ)ப3ாலபராக்ரமே ப3ஹூவிதே4
ப3ாலப்ரவாலாத4ரே
ப3ாலாதி3த்ய ஸமப்ரபே4 ப3ஹூநுதே
ப3ாலேந்து3 பூ4ஷோஜ்ஜ்வலே |
ப3ந்தூ4காருணவிக்3ரஹே ப3ஹூவித4
ப்3ரஹ்மாண்ட3ப4ாண்டோதரி
ப்3ரஹ்மாக3ஸ்த்ய ஸுரேந்த்3ரவந்தி3தபதே3
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி || 39

பாலாம்பிகே! முதிர்ந்த பராக்கிரமத்தை உடையவளே, பலவிதமாய்க் கட்சி தருகின்றவளே, இளம் பவழம் போன்ற உதடுகளை உடையவளே, எழும் ஞாயிறு போன்ற ஒளியுடையவளே, பலராலும் துதிக்கப்படுகின்றவளே, பந்தூக மலர் போல் சிவந்த மேனியளே, அனேக வித பிரம்மாண்டங்களையும் தன்னுள் அடக்கியவளே, பிரமன், அகத்தியர், இந்திரன் முதலானோரால் பூசிக்கப்பட்ட திருவடியை உடையவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

பா4வாதீத பத3ப்ரவர்த்தித கு3ணே பா4ஷே
ப4வாராதி4தே
பா4வாத்3யே ப4வரோக3 ப4ஞ்ஜனகரே
ப4த்3ரே ப4யச்சே2தி3நி |
ப4வ்யே பா4க்3யவது3த்தமேட்3யசரணே
பா4கீ3ரதீ2சாந்விதே
பா4ஸ்வச்சந்த்3ர விலோசனார்சிதபதே3
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி || 40

எண்ணத்திற்கப்பாற்பட்ட நிலைக்குச் செலுத்தப்படும் குணத்தை உடையவளே, சொல்லாயிருப்பவளே, சிவனால் ஆராதிக்கப்பட்டவளே, எண்ணத்திற்கு வித்தானவளே, சம்சாரம் என்னும் பிணியைப் போக்குகின்றவளே, மங்களத்தை தருபவளே, அச்சத்தைப் போக்குபவளே, பவ்யமானவளே, பாக்கியவான்களில் முதன்மையாயிருப்போரால் துதிக்கப்படுகின்ற திருவடியை உடையவளே, கங்கையை யணிந்த சிவனோடு கூடியிருப்பவளே, கண்களாக இருந்து வரும் சூரிய சந்திரர்களால் பூசிக்கப்பட்ட திருவடியை உடையவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

மாயே மந்மத2ஸேவிதே மரகதச்யாமே
மநோஜ்ஞாமலே
மாயாமோஹ விவர்ஜிதே மணிமயாகல்பே
மஹாமஞ்ஜுளே |
மாயாதீத மஹாமுநீந்த்3ரவரதே3
மாணிக்யகேயூரகே
மாலாலங்கரணே மதங்க3தநயே
வந்தே3(அ)கி2லாண்டே3ச்வரி || 41

மாயாதேவியே, மன்மதனுல் சேவிக்கப்பட்டவளே, மரகதப் பச்சை நிறம் சொண்டவளே, மனேரம்மியமான தூயவளே, மாயை மோகம் ஆகியவை இல்லாதவளே, மணிகள் இழைக்கப் பட்ட அணிகளைப் பூண்டவளே, மிகவும் அழகியவளே, மாயையைக் கடந்த மகா முனிவர்களுக்கு வரம் அருள்பவளே, மாணிக்கத்திலைலான வாகு வளையணிந்தவளே, மாலையணிந்தவளே, மாதங்கியே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

மித்ராக்³நீந்து³ விலோசனே மிஹிரபே⁴
மீநோல்லஸல்லோசனே
மித்²யாஜ்ஞானமநோதி தூ³ரசரணே
மீநத்⁴வஜாராதி⁴தே |
மீமாம்ஸாதி³ ஸமஸ்த சாஸ்த்ரமஹிதே
ம்ருஷ்டான்ன தா³ஞேத்³யமே
மித்ரோத்பா⁴ஸிநி மித்ரவஹ்நிவிநுதே
வந்தே³(அ)கி²லாண்டே³ச்வரி || 42

சூரியன், அக்னி, சந்திரன் ஆகிய மூன்று கண்களை உடையவளே, சூரியன் போன்ற ஒளி உள்ளவளே, மீன் போல் பிரகாசிக்கும் கண்களை உடையவளே, அறியாமைக்கும் எண்ணத்திற்கும் கூட அப்பாற்பட்டு இருக்கும் திருவடியை உடையவளே, மீனக் கொடியோனுகிய மன்மதனுல் ஆராதிக்கப்பட்டவளே, மீமாம்சை முதலான எல்லா சாஸ்திரங்களாலும் போற்றப்படுகின்றவளே பக்குவப்படுத்தப்பட்ட அன்னத்தை வழங்குகின்றவளே, சூரியனுக்கு ஒளி தருபவளே, சூரியனுலும் அக்கினியாலும் துதிக்கப் படுபவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

முக்³தே⁴ முக்³த⁴ சசாங்க சேக²ரயுதே
மூலாக³மார்த்தே²ா த³யே
முக்தே மூஷிகவாஹநார்சிதபரே மூர்தி
த்ரயாராதி⁴தே |
மூலாத⁴ாரகதே முக³ாப்³ஜவிலஸந்
முக்³த⁴ஸ்மிதே முக்திதே³
முத்³ராமோதி³த மாநஸே முநிநுதே
வந்தே³(அ)கி²லாண்டே³ச்வரி || 43

இளையவளே, பிறைமதியை முடியணிந்தவளே, மூலாகமங்களின் பொருளாய்த் திகழ்பவளே, பாசத் தொடர்பற்றவளே, விநாயகரால் போற்றப்பட்ட திருவடியை உடையவளே, மும்மூர்த்திகளாலும் ஆராதிக்கப்பட்டவளே, மூலாதாரத்தில் இருப்பவளே, தாமரையன்ன முகத்தில் புன்முறுவல் பூத்தவளே, முத்தியளிப்பவளே, முத்திரைகளால் மகிழ்ச்சியடையும் உள்ளத்தினளே, முனிவர்களால் துதிக்கப்படுகின்றவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

யஞ்ஞே யஜ்ஞப^{2}லப்ரதே^{3} யமனுதே
யக்ஷேச்வராராதி^{4}தே
யக்ஷ்மக்^{4}நே யமஸூத^{3}னப்ரியதமே
யஜ்ஞேச ஸம்பூஜிதே |
யந்த்ரஸ்தே^{2} யதிபூஜிதே யதிக்ருத ஸ்ரீசக்ர
பூ^{4}ஷோஜ்ஜ்வலே
யக்ஷிண்யாதி ஸமஸ்த சக்திவிநுதே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 44

யக்ஞ சொரூபிணியாயிருப்பவளே, வேள்விப்பயனை யருள்பவளே, விஷ்ணுவால் ஆராதிக்கப்படுகின்றவளே, 'யக்ஷ்மா' என்னும் நோயைப் போக்குபவளே, யமனைக் காய்ந்த சிவனுக்கு மிகவும் பிரியமானவளே, வேள்வியால் பங்கு கொள்ளும் கடவுளரால் பூசிக்கப்பட்டவளே, யந்திரங்களில் வீற்றிருப்பவளே, சந்யாசிகளால் பூசிக்கப்படுகின்றவளே, யதியால் தாபிக்கப் பெற்ற ஸ்ரீ சக்கரத்தில் அணியூட்டப்பெற்று பிரகாசிப்பவளே, யக்ஷிணி முதலான எல்லா சக்திகளாலும் போற்றப்பட்டவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

ராமே ராம வரப்ரதே^{3} ரஸகலே ராஜீவ
பத்ரார்ச்சிதே
ராகாசந்த்^{3}ரநிபே^{4} ரமார்சிதபதே^{3} ராஜாதி^{4}
ராஜாநதே |
ரம்யே ராஜத சைலச்ருங்க^{3} நிலயே
ரத்யாப்தபத்யா நுதே
ராக^{3} த்^{3}வேஷ விஹீநசித்த ஸுலபே^{4}
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 45

எழில் மிக்கவளே, பரசுராமருக்கு வரம் அருளியவளே, ரசம் நிரம்பிய கலைகளுக்கிருப்பிடமானவளே, தாமரை இதழ்களால் அர்ச்சிக்கப்பட்டவளே, பௌர்ணமி நிலவை ஒத்தவளே, லக்ஷ்மியால் வழிபட்ட திருவடியை உடையவளே, ராஜாதி ராஜர்களாலும் வணங்கப் பெறுபவளே, ரம்மியமானவளே, வெள்ளி மலையின் உச்சியில் வீற்றிருப்பவளே, ரதியினால் மீட்டப்பட்ட மன்மதனால் போற்றப்பட்டவளே, ராகத்வேஷமற்ற சித்தமுடையார்க்கு எளிதில் கிடைக்கக் கூடியவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

லாவண்யாம்பு[3]நிதே[4] லலாட நயநே
லம்பே[3]ாத[4]ராராதி[4]தே
லாக்ஷாரஞ்ஜித பாத[3]பத்[3]மயுக[3]லே
லம்ப[3]ாலகோத்ப[4]ாஸிதே |
லங்கேசாரிநுதே லயோத்[3]பவ[4]கரே
லக்ஷ்மீபதீட்[3]யப்ரியே
லக்ஷ்யாலக்ஷ்ய மநோஜ்ஞமத்[4]யலதிகே
வந்தே[3](அ)கி[2]லாண்டே[3]ச்வரி || 46

அழகுக் கடலின் நிதியே, நெற்றிக் கண்ணை உடையவளே, விநாயகரால் பூசிக்கப்படுகின்றவளே, செம்பஞ்சிக் குழம்பால் சிவப்பேற்றப்பட்ட திருவடித் தாமரைகளை உடையவளே, நீண்ட கூந்தலால் பிரகாசிக்கின்றவளே, ராமனால் துதிக்கப்பட்டவளே, உலகின் ஒடுக்கம் தோற்றம் இரண்டையும் செய்பவளே, லக்ஷ்மீ பதியால் துதிக்கப்படுவதால் மகிழ்பவளே, காணப்பட்டும் காணப் படாமலும் இருக்கின்ற நுண்ணிய கொடி போன்ற இடையை உடையவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

வாச்யே (வாமே) வாரிஜ லோசனார்சிதபதே[3]
வாக்[3] தே[3]வதாராதி[4]தே
வாமாத்[3]யே வரசைலராஜதநயே
வாமாதி[3]சக்த்யாத்மிகே |
வச்யாகர்ஷண ஸித்[3]தி[4] மூலகு[3]லிகே
வாதி[3]த்ரநாத[3]ப்ரியே
வாணீவல்லப[4] வஜ்ரபாணிவரதே[3]
வந்தே[3](அ)கி[2]லாண்டே[3]ச்வரி || 47

(வேதப்) பொருளாய் விளங்குபவளே, தாமரைக் கண்ணனுல் பூசிக்கப்பட்ட திருவடிகளை உடையவளே, ஸரஸ்வதியால் ஆராதிக்கப்பட்டவளே, அழகிகளுக்குள் முதன்மையானவளே, மேலான மலையரசனின் மகளே, வாமை முதலான சக்தி ரூபமாய் இருப்பவளே, வசம் பண்ணி ஆகர்ஷிக்கக் கூடிய சித்திக்கு மூல குளிகையாக இருப்பவளே, வாத்தியத்தால் எழுப்பப்படும் நாதத்தில் பிரியமுடையவளே, பிரமன், இந்திரன் முதலானேருக்கு வரம் அருள்பவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

சாந்தே ங்கரவல்லபே^{4} சசியுதே சாதோத^{3}ரி
ச்யாமலே
சங்காஹீந விசோகதே^{3} சதமக^{2}ராத்^{4}யே
சசாங்காநநே ।
சக்தே சக்தித^{4}ரார்சிதே சமத^{4}ருதீ^{4}சார்சிதே
சாரதே^{3}
சைவாத்^{3}யாக^{3}மபாரகே^{3} சமத^{4}நே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி ॥ 48

சாந்த சொரூபிணியே, சங்கரனுக்குப் பிரியமானவளே, சந்திரனை அணிந்தவளே, சிற்றிடையாளே, நீலமேனியளே, அச்சமும், சோகமும் இல்லாத நிலையைத் தருபவளே, இந்திரனல் ஆராதிக்கப்பட்டவளே, மதிமுகத்தாளே, சக்தியாயிருப்பவளே, குமரக் கடவுளால் அர்ச்சிக்கப்பட்டவளே, யதீந்தரர்களால் பூசிக்கப் பட்டவளே, சாரதாதேவியே, சிவாகமங்கள் முதலானவற்றின் கரைகண்டவளே, சாந்தியை தனமாகக் கொண்டவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

ஷட்சக்ராந்தக^{3}தே ஷட^{3}க்ஷரமயே
ஷட்த்ரிம்ச தத்வாத்மிகே
ஷட்பத்^{3}மாந்தபுரே ஷட^{3}ாநநநுதே
ஷட்கோண ஸம்ப^{4}ாவிதே ।
ஷட்வக்த்ர த்^{3}விபவக்த்ரராமவரதே^{3}
ஷட்க்^{3}ரந்தி^{2} வந்த்^{3}யாத்மிகே
ஷட்சக்தி ப்ரப^{4}வாத்மந: ப்ரியதமே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி ॥ 49

ஆறு சக்கரங்களிலும் இருப்பவளே, ஷடக்ஷர (ஓம் நமச் சிவாய) மயமானவளே, முப்பத்தாறு தத்துவ சொரூபமாயிருப் பவளே, ஆறு தாமரைகளை வாசத்தானமாகக் கொண்டவளே, ஆறுமுகத்தால் துதிக்கப்பட்டவளே, அறு கோணங்களில் பூஜிக்கப்பட்டவளே, ஆறுமுகன், ஆனைமுகன், ராமன் ஆகியோ ருக்கு வரமருளியவளே, அறுவகை பந்தங்களாலும் வந்திக்கப் படுகிறவளே, அறுவகைச்சக்திக்கும் தோற்றமானவளே, எல்லோ ராலும் விருப்பப்படுகின்ற இயல்பினளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

ஸர்வாபீ⁴ஷ்டப²லப்ரதே³ ஸுமதிபி⁴:
ஸம்ஸேவிதே ஸாத்விகை:
ஸர்வாலங்கரணே ஸத³ாசிவமயே
ஸம்பத்கரே ஸாக்ஷிணி |
ஸாதி³ஸ்தே² ஸரஸீருஹாக்ஷியுக³லே
ஸங்க⁴ட்டவக்ஷோருஹே
ஸாக்ஷாத்காரிணி ஸர்வலோகவரதே³
வந்தே³(அ)கி²லாண்டே³ச்வரி || 50

வேண்டிய பலன்களனைத்தையும் தருபவளே, சத்துவ குணம் மிக்க நன்மதியாளரால் சேவிக்கப்படுகிறவளே, எல்லா அலங் காரங்களும் பொருந்தியவளே, சதாசிவமயமானவளே, செல்வ த்தை உண்டாக்குபவளே, அனைத்திற்கும் சாட்சியாயிருப்பவளே, ஆதியாய் இருப்பவளே, தாமரை போன்ற இரு கண்களை உடை யவளே, கட்டான மார்பகத்தை உடையவளே, அனைத்தையும் நேரில் அறிபவளே, உலகிலுள்ள உயிர்களனைத்திற்கும் வரம் அருள்பவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

ஹாஹாகாரரவைஸ்த்ரிபி⁴: ஸ்துதபதே³
ஹாராபி⁴ராமே(அ)ஸமே
ஹம்ஸோல்லாஸிதரம்ய விச்வவிப⁴வே
ஹம்பீ³ஜ மூலாங்குரே |
ஹஸ்தே² ஹஸ்திவநாலயே ஹரிஹர
ப்³ரஹ்மேந்த்³ர வந்த்³யேச்வரி
ஹம்ஸாதீதபதே³ ஹகாரசரிதே
வந்தே³(அ)கி²லாண்டே³ச்வரி || 51

மும்முறை ‘ஹா ஹா’ என்ற ஒலிகளால் துதிக்கப்படுகின்ற திருவடிகளை உடையவளே, அணியப்பட்ட ஆரத்தால் அழகூட்டப் பெற்றவளே, இணையற்றவளே, பிரம்ம சொரூபத்தால் பிரகாசிப்பவளாய் இவ்வழகிய உலகிற்குத் தோற்றுவாயாக இருப்பவளே, ‘ஹம்’ என்ற பீஜ மந்திரத்தின் முனையாயிருப்பவளே, ‘ஹ’ என்னும் ஒலியில் இருப்பவளே, ஆனைக்காவில் உறைபவளே, அரி, அரன், பிரமன், இந்திரன் ஆகியோர்களால் வணங்கப்படுகின்றவளே, பிரம்ம பதத்திற்கும் மேலான பதத்தில் இருப்பவளே, ‘ஹ’ என்ற மந்திர ஒலியில் சஞ்சரிப்பவளே, அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

லம்பீ^{3}ஜே லகுலே லதாம்ருதுதநோ லங்கார
ஸம்பூஜிதே
லம்பீஜேந ஸு²லக்ஷிதேட்^{3}ய விப^{4}வே
க்லீங்கார ரூபாந்விதே|
லாந்தே ஹந்த க^{3}ரே ஜவாத்ஸமுதி^{3}தே
த்ரஸ்தாந் ஸு²ராந்வீக்ஷ்ய தத்
லாந்தே கே^{3} விநியச்ச^{2}தீ^{3}சமஹிலே
வந்தே^{3}(அ)கி^{2}லாண்டே^{3}ச்வரி || 52

‘லம்’ என்ற பீஜாக்ஷரத்திற்கு உரியவளே, தண்டத்தை ஏந்தியவளே, மென்கொடி போன்ற சரீரத்தை உடையவளே, ‘லம்’ என்ற ஒலியால் பூசிக்கப்படுகின்றவளே, ‘லம்’ என்ற பீஜாக்ஷரத்தினுல் தெளிவாக போற்றப்படும் பெருமைக்குரியவளே, ‘க்லீம்’ என்ற மந்திர உருவினளே, லகாரத்தின் முடிவாயிருப்பவளே, ஆஹா, திடீரென ஆலகால விஷம் எழுந்தபோது அஞ்சி நடுங்கிய தேவர்களைப் பார்த்தவுடன் தன் கண்டத்தில் அடக்கிய ஈசுவரனின் மனைவியே, இசை வடிவானவளே அகிலாண்டேச்வரி, உன்னை வணங்குகிறேன்.

க்ஷோணீசாக்^{3}ர்ய பதை^{3}கலக்ஷண விதி^{4}க்ஷேப
ப்ரமாணேக்ஷணே
க்ஷிப்ரா த^{3}க்ஷிண குக்ஷிசிக்ஷணமந:
க்ஷேத்ரஜ்ஞ ஸம்ரக்ஷிணி |

த்ர்யக்ஷாலக்ஷ்ய திதிக்ஷூத³க்ஷுத³மந க்ஷாந்தாந்த
ஸம்வீக்ஷணே
க்ஷந்தவ்யம் க்ஷிதிப்⁴ருத்ஸூதே ஸ்துதிவச:
க்ஷூத்³ரம் மதீ³யம் சிவே || 53

உலகையாளும் வேந்தர்களின் தோற்றத்தானமாக விளங்கும் விஷ்ணுவின் மீது செலுத்தப்படும் பிரமாண பூதமான கண்களை உடையவளே, உயிர்களைக் காப்பவளே, முக் கண்ணனிடத்தில் காணமுடியாத பொறுமை, சாமர்த்தியம், அடக்கம், சகிப்புத் தன்மை ஆகியவற்றைக் கொண்டு கடைக்கண் பார்வை செலுத்து பவளே, மலைமகளே, சிவசக்தியே, என்னுடைய இச் சிறு புகழுரைக்காக மன்னிக்கவேண்டுகிறேன்.

இதி கி³ரிவரபுத்ரீ பாத³ராஜீவ பூ⁴ஷா
பு⁴வனமமலயந்தீ ஸூக்தி ஸௌரப்⁴ய ஸாரை: |
சிவபத மகரந்த³ஸ்யந்தி³நீ மந்நித³ாநா
மத³யது கவிப்⁴ருங்கான் மாத்ருகா புஷ்பமாலா || 54

மலையரசனின் மகளின் திருவடியில் தாமரையைப் போன்றதும் இப் பாக்களின் புகழ் மணத்தால் உலகை புனிதமடையச் செய்வதும், சிவபதமாகிய தேன் சொட்டுவதுமான என்னாலாக்கப் பட்ட இம் மாத்ருகா புஷ்பமாலை கவிகளாகிற வண்டுகளிடையே மகிழ்ச்சியைப் பெருக்கட்டும்.



ஸ்ரீ குஹாநன்தர்   ஸ்ரீ சிதாநன்தர்   ஸ்ரீ பாலாநன்தர்

குஹாநன்த மண்டலி

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மஹேஸ்வர
குரு ஸாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:

ஸத்குரு மண்டல ஸ்ரீ பாதுகாப்யாம் ஸமர்ப்பயாமி

திருமதி. பத்மா நாராயண ஸ்வாமி
Prof. திரு. V.R. நாராயண ஸ்வாமி
No.17-B, Ist Main Road, Indra Nagar,
Chennai - 600020, ☎:24403149